**21.08.2025**
**MCOP.109/2023**
**<u>ம.சா.1. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

விபத்து சமயத்தில் எனக்கு 63 வயது என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் தற்சமயம் வீட்டில் தான் இருந்து வருகிறேன். விபத்து எப்போது நடந்தது என்றால் தற்சமயம் எனக்கு ஞாபகமில்லை. என் மீது மோதிய வாகனம் இருசக்கவர வாகனம். நான் தான் கவனக்குறைவாகவும், அஜாக்கரதையாகவும் சாலை விதிகளை அனுசரிக்காமல் திடீரென சாலையின் குறுக்கே சென்று இவ்விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கவனமாகவும், சாலை விதிகளை அனுசரித்தும், மெதுவாகவும் தான் வந்தார் என்றும், இந்த விபத்திற்கு அவருடைய அஜாக்கிரதையோ, கவனக்குறைவோ காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உணவகம் வைத்து நடத்தி வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உணவகம் நடத்தி வருவது தொடர்பாக எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு 63 வயது என்பதால் எவ்வித வேலைக்கும் செல்ல இயலாது என்றும், அதனால் எனக்கு எந்த வித வருமானமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 2 மகள்கள் மற்றும் 3 மகன்கள் உள்ளனர். நான்

தான் என்னுடைய மகன்களை சார்ந்து வாழ்கிறேன் என்றும், என்னை சார்ந்து யாரும் வாழவில்லை என்றால் சரியல்ல. என் மீது மோதிய வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் நஷ்ட ஈடு ஏதும் பெற வேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் பெற வேண்டும் என்றும், காப்பீட்டு விதிகளை மீறிய காரணத்தினால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு நான் 25 நாள்கள் இருந்தேன். நான் அரசு மருத்துவமனையில் இலவச சிகிச்சை பெற்றுக்கொண்டதால் மருத்துவத்தை பொறுத்து எனக்கு எந்த செலவீனங்களும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றும், தற்போது அது முற்றிலும் பூரணமாக குணமடைந்து விட்டது என்றாலும் சரியல்ல. நான் நஷ்ட ஈடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக என்னுடைய இயலாமையை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகை அதிகம். அது எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.